10th March 1966]

அறந்தாங்கி வட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

* 232 கேள்வி—திரு. ஆ. துரையரசன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில் 1965-66-ல் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தஞ்சாவூர் ஜில்லாவில் அறந்தாங்கி வட்டத்தில் ஒரு பிரதம சுகாதார நிலையம் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

செங்கிப்பட்டியிலுள்ள காசநோய் மருத்துவமனை

* 233 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் அமைந்திருக்கும் (M.G.M.) காசநோய் ஆஸ்பத்திரிக்கு அரசாங்கம் மானியம் கொடுக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—PRIVILEGE MATTER.

PROSECUTION OF A MEMBER FOR FORWARDING TO CHIEF MINISTER A PETITION CONTAINING ALLEGEDLY FALSE ACCUSATIONS.

திரு. செ. மாதவன்: கனம் சபாநாயகர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் ஒருவரால் அமைச்சர்களுக்கு எழுதப்படக்கூடிய கடிதங்கள் அல்லது குற்றச் சாட்டுகள் இவைபற்றி பிறர் ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு உரிமை இருக்கிறதா? அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டால், அது சபையினுடைய அங்கத்தினர்களின் உரிமைகளைப் பாதிக்குமா என்பதைப்பற்றி நான் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பியிருக்கிறேன்.

இந்தச் சபையினுடைய உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களிடத்திலே, அவர்களுடைய தொகுதியிலிருந்து அதிகாரிகள் மீது கூறப்பட்ட புகார் ஒன்றை, இந்த மன்றத்தில் வைத்துக் கொடுத்து 'நீங்கள் அதை பரிசீலிக்கவேண்டும்' என்று கூறினார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்களும் இதைப் பரிசீலிக்கும்படி கீழே உள்ள